DEPOSITION OF WITNESS
(Chapter XXV of BNSS)
IN THE COURT OF Prl. DISTRICT AND SESSIONS JUDGE
KANNIYAKUMARI AT NAGERCOIL

Calendar
Miscellaneous
Preliminary Register
Session Case S.C.No. 243/2024
Prosecution Witness - P.W. 10

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர்.ராஜேஷ் |
| Father's Name | : | P. Rajiah |
| Village | : | Vallioor |
| Taluk | : | Radhapuram |
| Calling | : | Doctor |
| Age | : | 53 |
| Date | : | 23.09.2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.09.2025.

(எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர்.)

23.09.2025

**முதல் விசாரணை:-**

நான் தற்சமயம் கன்னியாகுமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஆசாரிபள்ளம் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.11.2023 அன்று பளுகல் காவல் நிலைய குற்ற எண். 94/2023 வழக்கில் இறந்து போன ஜேம்ஸ் என்ற 54 வயது மதிக்கதக்க உள்ள ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்கான விண்ணப்பத்தினை காவல்

ஆய்வாளரிடம் பெற்று அன்று காலை 11.15 மணிக்கு பிரேத பரிசோதனை செய்ய தொடங்கி பிற்பகல் 12.15 மணி வரை பிரேத பரிசோதனை செய்தேன். அந்த வேண்டுகோள் கடிதத்தை தாக்கல் செய்கிறேன். **அது அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பிரேதமானது தலைமை காவலர் 1656 திரு. ஜெயகுமார் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது. பிரேதத்தில் பிரேத விரைப்பு தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. கை, கால் விரல் நகங்கள் வெளிறி காணப்பட்டன. உடல் சாதாரண போஷாக்குடனும், உடல் கட்டமைப்புடனும் காணப்பட்டது. உறைந்த இரத்தம், முகம் மற்றும் தலையில் காணப்பட்டது. மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவமனை கட்டு இடது காலிலும், இடது பாதத்திலும் காணப்பட்டது. கீழ்க்கண்ட இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டன.

1. இடது கண்புருவத்திற்கு சற்று மேற்புறமாக 5 x ½ செ.மீ. x தோல் அளவு உள்ள ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

2. நெற்றியின் இடது பகுதியில் தலைமுடி அருகாமையில் 2 x ½ செ.மீ. x தோல் அளவு ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

3. நெற்றியின் இடது பகுதியில் 2 x 1 செ.மீ x தோல் அளவு ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

4. தலையின் இடது பகுதியில் 3 x 2 செ.மீ. x எலும்பு அளவு ஆழமுள்ள ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. இந்த காயமானது இடது காதின் மேல் முனையிலிருந்து 5 செ.மீ. மேல்புறமாக காணப்பட்டது.

5. தலையின் இடது பகுதியில் 2 x ½ செ.மீ. x தலை தோல் அளவு ஆழமுள்ள ஒரு

சிதைந்த காயம் இடது காதின் மேல்முனையிலிருந்து 8 செ.மீ. மேல்புறமாக காணப்பட்டது.

6. தலையின் இடது பகுதியில் 2 x ½ செ.மீ. x எலும்பு அளவு ஆழமுள்ள சிதைந்த காயம், இடது காதின் மேல்முனையிலிருந்து 10 செ.மீ. மேல்புறமாக காணப்பட்டது.

7. இடது காதில் 3 x ½ செ.மீ. காதின் முழு தடிமன் அளவிற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

8. தலையின் இடது பகுதியில் 2 x 1 செ.மீ. x தலை தோல் அளவு ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. இந்தக் காயமானது இடது காதின் மேல் முனையிலிருந்து 3 செ.மீ. மேல்புறமாக காணப்பட்டது.

9. தலையின் இடது பகுதியின் பின்பக்கமாக 6 x 3 செ.மீ. x எலும்பு அளவு ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. இந்த காயமானது இடது காதிலிருந்து 8 செ.மீ. பின் நோக்கி இருந்தது.

10. இடது காதின் பின்பக்கமாக 3 x 1 செ.மீ. எலும்பு அளவு ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

11. கீழ் தாடையில் இடது பக்க மூக்கிற்கு சற்று கீழ்புறமாக 2 x 1 செ.மீ. தோல் அளவு ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

12. இடது கன்னத்தில் 3 x ½ செ.மீ. x தேல் அளவு ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

13. மேலே குறிப்பிட்டுள்ள காயம் 12 ன் மீது இடது கன்னத்தில் 5 x 3 செ.மீ. அளவில் ஒரு சிராய்ப்புடன் கூடிய ஒரு கன்றிய காயம்.

14. மேல் உதட்டிற்கு சற்று மேலே 3 x ½ செ.மீ. தோல் அளவு ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

15. நெற்றியின் வலது பகுதியில் 2 x ½ செ.மீ. மற்றும் 1 ½ x ½ செ.மீ. அளவிற்கு தோல் அளவு ஆழமுடையதான இரண்டு சிதைந்த காயங்கள் காணப்பட்டன.

16. தலையின் முன்பகுதியில் வலது பக்கமாக 1 ½ x ½ செ.மீ. x தோல் அளவு ஆழமுள்ள சிதைந்த காயம் காணப்பட்டது.

17. கழுத்தின் முன்பக்கமாக கீழ் பகுதியில் 4 x 2 செ.மீ. x தோல் அளவு ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

18. வலது காரை எலும்பு பகுதியில் 5 x 2 செ.மீ. அளவிலான ஒரு சிராய்ப்புடன் கூடிய ஒரு கன்றிய காயம் காணப்பட்டது.

19. கழுத்தில் 44 x ¼ செ.மீ. அளவிலான குறுக்கு வசமான முழுமையான ஒரு தடம் காணப்பட்டது. அந்த தடமானது கழுத்தின் இடது பகுதியில் ஒன்றின் மீது ஒன்று காணப்பட்டது. இந்த தடம் இடது காதின் கீழ் முனையிலிருந்து 6 செ.மீ. கீழ்புறமாகவும், நாடியிலிருந்து 9 செ.மீ. கீழ்புறமாகவும்இ வலது காதின் கீழ் முனையிலிருந்து 7 செ.மீ. கீழ்புறமாகவும் காணப்பட்டது.

20. கழுத்தின் முன்பக்கமாக இடது பகுதியில் 2 x ½ x ½ செ.மீ. அளவில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

21. இடது முன்கையின் பின்பக்கமாக நடு மற்றும் உள் பகுதியில் 2 x ½ செ.மீ. x எலும்பு அளவு ஆழத்திற்கு ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. அதை பரிசோதிக்கையில்அதன் அடியில் உள்ள முன்கை எலும்புகளில் ஒன்றான அல்னா

என்ற எலும்பு உடைந்து காணப்பட்டது.

22. இடது முன்கையில் உள் பகுதியில் கீழ் அரை பகுதியில் ஒன்றுக்கு ஒன்று அருகாமையில் 1 செ.மீ. நீளத்திற்கு இரண்டு சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டன.

23. கீழ் உதட்டின் இடது பகுதியின் முழுமையாக இரத்தம் கட்டி காணப்பட்டது.

மேலே குறிப்பிட்டுள்ள காயங்கள்அனைத்தும் சிவந்த நிறத்தில் இருந்தன. தலைப் பகுதியை பரிசோதிக்கையில் தலையின் இடது பகுதி முழுமையாக தலை தோல் புறத்தில் இரத்தம் கன்றி காணப்பட்டது.

கபாலத்தின் மேல் பகுதியில் இடது பக்கமாக காதை சுற்றியுள்ள Temporal என்ற எலும்பு அமுங்கி உடைந்து காணப்பட்டது. அதேபோல் தலையின் இடது பகுதியில் பக்கவாட்டு மற்றும் பின்புறமாக Parieto Occipital எலும்பு அமுங்கி உடைந்து காணப்பட்டது.

மூளையின் உள்சவ்வின் உட்புறமாக இரண்டு பகுதியிலும் இரத்தம் கசிந்து காணப்பட்டது. கழுத்து பகுதியை பரிசோதிக்கையில் கழுத்தின் இரண்டு பக்கங்களில் உள்ள சதைகள் இரத்தம் கன்றி, இரத்தம் வெளியே வந்து காணப்பட்டது.

இருதயத்தில் இடது பக்கத்தில் உள்ள அறை ஏற்கனவே மாரடைப்பு வந்ததற்கான அடையாளம் காணப்பட்டது. மகாதமனியில் கொழுப்பு திட்டுகள் காணப்பட்டது. இரண்டு நுரையீரல்களிலும் புகைத் துகள்கள் காணப்பட்டன. நாவடி எலும்பு இயல்பாக இருந்தது. மற்ற உள்ளுறுப்புகள் இயல்பாகவும் குறுக்கு வெட்டுத் தோற்றத்தில் இரத்தச் செறிவுடனும் காணப்பட்டது. உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு திருநெல்வேலி, வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. பிரேத

பரிசோதனை அறிக்கை தயார் செய்து ஆய்வாளருக்கு வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் பிரேத பரிசோதனை அறிக்கை நான் வழங்கியதுதான். **அது அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதில் இறந்த நபரின் இறப்பிற்கான காரணத்தை இ,ரசாயன பரிசோதனை அறிக்கைக்காக நிறுத்தி வைத்திருந்தேன். இரசாயன பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதில் உடல் உள்ளுறுப்புகளில் கார்போ ஃபியூரான் பூச்சிக்கொல்லி மருந்து இருந்ததாகவும், ஈத்தேல் ஆல்கஹால் இருந்ததாகவும் கூறப்பட்டிருந்தது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த இரசாயன பரிசோதனை அறிக்கை தான். **அது அ.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இறப்பிற்கான காரணம் இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட பல தரப்பு காயங்களினாலும், கார்போ ஃபியூரான் பூச்சிக் கொல்லி மருந்தின் இணைந்த விளைவுகளாலும் இறந்திருக்கக் கூடும் என கருத்துக் கூறி சான்றிதழ் வழங்கினேன். மேலும் அவருடைய மரணம் பிரேத பரிசோதனைக்கு 20 லிருந்து 26 மணி நேரத்திற்கு முன்னதாக ஏற்பட்டிருக்க கூடும் என்றும், கருத்து கூறியிருந்தேன். நான் வழங்கிய இறுதியறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான். **அது அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

காயம் எண். 19 என்னிடம் காட்டப்படும் சா.பொ. 8 நைலான் கயிறினால் ஒருவரின் கழுத்தை சுற்றி இறுக்கும்போது ஏற்பட வாய்ப்புண்டு. காயம் எண்கள். 17 மற்றும் 20 அவ்வாறு இறுக்கும்போது ஒரு நபர் திமிறினால் ஏற்பட வாய்ப்புண்டு.

கழுத்தின் இரண்டு பக்கங்களில் உள்ள சதைகள் இரத்தம் கன்றி, இரத்தம் வெளியே வந்து காணப்பட்டது என நான் குறிப்பிட்டுள்ள காயங்கள் அவ்வாறு ஒரு

நபரை சா.பொ. 8 போன்ற நைலான் கயிறினால் இறுக்கும்போது ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு.

நுரையீரல்களில் காணப்பட்டிருந்த புகைத் துகள்கள் அந்த நபர் புகைப்பிடிக்கும் பழக்கம் கொண்டவராக இருந்திருந்தால் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு.

காயம் எண்கள். 17, 19, 20 ஐ தவிர மற்ற காயங்கள் என்னிடம் காட்டப்படும் சா.பொ. 9 ஆணி பிடுங்கும் சுத்தியலால் மாறி மாறி அடிக்கும்போது ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. தலை பகுதியில் இருந்ததாக நான் சொல்லியுள்ள உட்காயங்கள் இந்த காயங்களுக்கு தொடர்பான உட்காயங்கள்தான்.

காயம் எண்கள். 21 மற்றும்  22 அந்த நபரை சா.பொ. 9 ஆணி பிடுங்கும் சுத்தியலால் அவருடைய தலையை ஓங்கி அடிக்கும்போது இடது கையால் தடுக்க முயற்சித்திருந்தால் ஏற்பட வாய்ப்புண்டு. கார்போ ஃபியூரான் என்பது ஒரு பூச்சிக் கொல்லி மருந்து. கார்போ ஃபியூரான் என்பது ஒரு பூச்சிக் கொல்லி மருந்தை ஒரு நபர் உட்கொண்டால் மூச்சித் திணறல், வாந்தி, வயிற்றுப் போக்கு ஏற்படும். கண்களில் நீர் நிறைய வடியும், மூக்கிலிருந்தும் திரவம் வடியும், சதைகள் துடிக்கும் சிகிச்சை அளிக்கவில்லை என்றால் மூச்சுத் திணறி இறந்து போய்விடுவார். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>** :-

உடல் உள்ளுறுப்புகளில் எவ்வளவு கார்போ ஃபியூரான் இருந்தது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். அந்த அறிக்கையை தயார் செய்த நிபுணர்தான் சொல்ல முடியும் என்றால் சரிதான். எனது இறுதியறிக்கையில்

விஷத்தினாலும், காயங்களினாலும் ஏற்பட்ட கூட்டு விளைவினால் அவருடைய மரணம் ஏற்பட்டிருக்க கூடும் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். காயம் எண்கள். 17, 19 மற்றும் 20 ஒரு நபர் தன்னிச்சையாக தற்கொலைக்கு முயற்சி செய்ய தூக்கில் தொங்கும்போது ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரியல்ல, அப்படி இருந்திருந்தால் அந்த கயிற்றின் தடம் மேலிருந்து கீழாக சாய்வாகவும் முழுமையற்றும் இருக்கும். ஆனால் காயம் எண். 19 முழுமையாகவும், குறுக்கு வசமாவும் உள்ளது. கழுத்தின் உள்பகுதியில் உள்ள சதைகள் இரத்தம் கன்றி காணப்பட்டிருந்தது. அதனால் தூக்கில் தொங்கியிருக்கவோ, தொங்க முயற்சி செய்யததாலோ அந்த காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. துணி காயப் போடுவதற்காக உள்ள கயிற்றில் சிக்கிக் கொண்டிருந்தால் கூட மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டா என்றால் இல்லை. அந்த காயத்தில் கொஞ்ச பகுதி வேண்டுமானால் வரலாம். அந்த காயம் முழுவதுமாக அப்படி ஏற்பட்டிருக்க முடியாது.

காயம் எண்கள். 4, 6, 9 மற்றும் 10 ஒரு நபர் தற்கொலைக்காக விஷத்தை குடித்து விட்டு அதில் சாகாமல் அதில் ஏற்பட்ட விளைவுகளினால் அதை தாங்க முடியாமல் அவர் எழுந்து ஓட முயற்சிக்கும்போது, அவரால் ஓட முடியாமல் தடுமாறி கீழே விழுந்து, மீண்டும் எழுந்து, மீண்டும் விழுந்து, அதனால் ஏற்பட்டிருக்க முடியுமா என்றால் அது குறித்து என்னால் சொல்ல முடியாது.

மேற்சொன்ன காயங்களை தவிர மீதி உள்ள காயங்களும் அந்த நபர் விஷத்தை குடித்து அதனால் அவர் படும் அவதிகளினால் அங்கே இருக்கும்

பொருள்களில் மீது விழுந்து ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டா என்றால் அப்படி வர வாய்ப்பில்லை.

ஒரு நபர் இடது காலில் காயம் இருக்கும்போது எழுந்து நடக்க முயற்சிக்கையில் தடுமாறி விழும்போது இடது புறமாகதான் விழ வாய்ப்புண்டு என்றால் எந்த பக்கம் வேண்டுமானாலும் விழலாம்.

அவருடைய இரைப்பையில் 300 ML பிரவுண் கலர் திரவம் இருந்ததாக என்னுடைய அறிக்கையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவருடைய இடது காலில் இருந்த கட்டை பிரித்து அதில் இருந்த காயங்களை ஆய்வு செய்தேனா என்றால் கட்டை பிரித்தேன். காயங்கள் எதுவும் இல்லை. அவ்வாறு கட்டை பிரித்ததாகவோ, ஆய்வு செய்ததாகவோ என்னுடைய அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். என்னுடைய பிரேத விசாரணை பரிசோதனை அறிக்கை முழுமையானது கிடையாது என்றாலும் அவருக்கு இடது காலில் இருந்த தீராத நோயினால் அவர் விஷம் அருந்தி தற்கொலைக்கு முயற்சி செய்து அதில் ஏற்பட்ட அவதிகளினால் அவர் எழுந்து தப்பிப்பதற்காக அங்கிருந்த அசை கயிற்றை பிடித்து எழும்புவதற்காக முயற்சி செய்தபோது அது கழுத்தில் சிக்கி கழுத்தில் காயம் ஏற்பட்டு, அதன்பின்னர் அதிலிருந்து விடுபட்டு கீழே விழும்போது மேஜையிலும், நாற்காலியிலும், இதர கடினமான பகுதிகளிலும் மோதி நான் குறிப்பிட்ட காயங்கள் ஏற்பட்டுள்ளன என்றாலும் நான் சொன்னது போல ஏற்படுவதற்குவாய்ப்புகள் இல்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னது போல சுத்தியலில் அடித்தோ, கயிற்றினால் இறுக்கியோ அல்லாமல் மேற்சொன்ன காயங்கள் வேறு விதங்களில்

கூட ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு என்றால் சுத்தியல் போன்ற வேறு பொருட்களினால் அந்த காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. எந்த ஒரு கயிற்றினாலும் கழுத்தில் இருந்த தடங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு.

**நீதிமன்ற கேள்வி:-**

நான் என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மாரடைப்பு பற்றி, சிறிது தெளிவாக சொல்ல முடியுமா என்றால் சிலர் மாரடைப்பு வந்து மருத்துவம் எதுவும் செய்து கொள்ளாமல் கூட தானாகவே அதிலிருந்து விடுபட்டுவிடுவார்கள். அதற்கான தடயத்தைதான் நான் பார்த்தேன். அந்த மாரடைப்பு அந்த நபருடைய இறப்பிற்கு பல காலத்திற்கு முன்பு ஏற்பட்டிருக்கக் கூடும்.

குறுக்கு விசாரணை இல்லை.